# தேவகோட்டை நகராட்சி

தேவகோட்டை நகராட்சி வளாகத்தில் அவசரக்கூட்டம் தனிஅலுவலரால் 05.05.2021ம் தேதி புதன்கிழமை காலை 11.00 மணிக்கு கூட்டம் நடைபெறவுள்ளது. அவ்வமயம் கீழ்கண்ட பொருட்கள் விவாதத்திற்கு எடுத்துக்கொள்ளப்படும்.

## பொருள்–30

தமிழ்நாடு சட்டமன்றப்பொது தேர்தல் 2021ல் நடைபெறுவதை முன்னிட்டு தேர்தல் நடத்தை விதிகள் அமலில் உள்ள காரணத்தால் தேவகோட்டை நகராட்சி பொறியியல் பிரிவு மற்றும் பொதுசுகாதாரப்பிரிவில் கீழ்காணும் பணிகள் நகராட்சி சட்டம் 1920 விதி எண் 15–ன், கீழ் தேர்தல் பணியின் அவசர அவசியம் கருதி பணிகள் மேற்கொள்ளப்பட்டது. அதன் விபரம் பின்வருமாறு.

| வ. எண் | பணிகளின் விபரம் | மதிப்பீடு ரூ. |
|---|---|---|
| 1. | சட்டமன்ற பொதுத்தேர்தல் – 2021, நடைபெறுவதை முன்னிட்டு தேவகோட்டை நகராட்சிக்குட்பட்ட 58 வாக்குச்சாவடிகளில் மராமரத்துப்பணி மற்றும் அடிப்படை வசதிகள் செய்தல் பணி. | **9,00,000** |
| 2. | இந்நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் அமைந்துள்ள வாக்குச் சாவடிகளில் மாற்றுதிறானாளிகளுக்கான மடக்கு நாற்காலி வாங்குதல் பணி. | 2,50,800 |
| 3. | பொதுசுகாதார பணியின் அவசர அவசியம் கருதி தேவகோட்டை நகராட்சிக்கு சொந்தமான ரஸ்தாவில் அமைந்துள்ள உரக்கிடங்கு ஒழுங்கு படுத்ததுதல் பணி. | 5,84,000 |
| 4. | தேர்தல் பணி அவசர அவசியம் கருதி தேவகோட்டை நகராட்சி ஈர்ப்பு வாகனம் TN63 T 3316 வாகனம் பழுது நீக்கம் செய்தல் பணி. | 64,000 |
| 5. | தேர்தல் பணி அவசர அவசியம் கருதி தேவகோட்டை நகராட்சி ஈர்ப்பு வாகனம் TN63 AS 1648 வாகனம் பழுது நீக்கம் செய்தல் பணி. | 38,850 |
| 6. | இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் கொரோனா வைரஸ் காய்ச்சல் அதிகளவில் பரவி வருவதால் கொரோனா வைரஸ் காய்ச்சல் முன்னேச்சரிக்கை தடுப்பு நடவடிக்கையாக இந்நகராட்சி வாகனங்களில் ஒலி பெருக்கு பொருத்தி விழிப்புணர்வு பணி மேற்கொள்ளப்பட்ட பணி. | 64,020 |
| 7. | இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட வாக்குச்சாவடிகளில் கொரோனா வைரஸ் காய்ச்சலில் இருந்து பொதுமக்களை பாதுகாக்கும் பொருட்டு தேர்தல் வாக்குப்பதிவு நாளன்று பொதுமக்கள் மற்றும் தேர்தல் பணி அலுவலர்களுக்கு வழங்க பாதுகாப்பு உபகரணங்கள் வாங்கியது. | 4,39,800 |
| 8. | இந்நகராட்சி பகுதிகளில் கொரோனா வைரஸ் காய்ச்சல் அதிகளவில் பரவி வருவதால் 27 வார்டுகளிலும் உள்ள வீடுகளிலும் கொரோனா வைரஸ் காய்ச்சல் இருந்து பொதுமக்களை பாதுகாக்கும் பொருட்டு கொரோனா வைரஸ் காய்ச்சல் முன்னேச்சரிக்கை தடுப்பு நடவடிக்கை மேற்கொள்ள தேவையான கிருமிநாசினிகள் வாங்கி பயன்படுத்தியது. | 9,92,000 |
| 9. | இந்நகராட்சி பொதுசுகாதாரப்பிரிவின் கீழ் திடக்கழிவு மேலாண்மை திட்டத்தின் மூலம் பணியாற்றும் தூய்மை பணியாளர்கள் மூலம் தூய்மை | 94,250 |

| | | |
|---|---|---|
| | பணி மேற்கொண்டு பொசுகாதார நலன்காக்க தேவையான தளவாடப்பொருட்கள் வாங்கி மேற்கொள்ளப்பட்ட பணிகள். | |
| 10. | இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில 27 வார்டுகளிலும் கொரோனா வைரஸ் காய்ச்சல் தடுப்பு முன்னெச்சரிக்கை நடவடிக்கை மேற்கொள்ளவும், தூய்மை பணியாளர்களுக்கு அடிக்கடி கை சுத்தம் செய்வதற்கு தேவையான சோப்புகள் மற்றும் கிருமிநாசினிகள் வாங்கிய வகையில் செய்த பணி. | 3,99,250 |
| 11. | இந்நகராட்சி பகுதிகளில் கொரோனா வைரஸ் காய்ச்சல் குறித்த விழிப்புணர்வு பொதுமக்களுக்கு ஏற்படுத்தி, களப்பணி மேற்கொள்ள விழிப்புணர்வு நோட்டீஸ் மற்றும் கொரோனா அறிகுறிகள் குறித்த கணக்கெடுப்பு மேற்கொள்ள கணக்கெடுப்பு படிவம் போன்றவை அச்சடித்து பெறப்பட்டு பணி மேற்கொள்ள துப்புரவு ஆய்வரின் குறிப்பின்படி, உத்தேச செலவீனம் . | 40,000 |
| 12. | தேவகோட்டை நகராட்சி தமிழ்நாடு சட்டமன்ற பொதுத்தேர்தல் 2021 தேர்தல் விதிமுறைகளின்படி விளம்பரம் பதகைகள் அழித்தல் மற்றும் அப்புறப்படுத்தல் பணி. | 38,000 |
| 13. | தேவகோட்டை நகராட்சி தமிழ்நாடு சட்டமன்ற பொதுத்தேர்தல் அன்று இந்நகராட்சிக்குப்பட்ட வாக்குச்சாவடிகளில் அடிப்படை வசதிகள் செய்தல் பணி. | 50,485 |

மேற்காணும் பணிகள் தேர்தல் நடத்தை விதிகள் அமலில் உள்ள காரணத்தால் தேர்தல் பணி அவசர அவசியம் கருதி நகராட்சி சட்டம் 1920 விதிஎண்.15ன், கீழ் பணிகள் மேற்கொள்ளப்பட்டது மன்றம் அனுமதிக்கு.

**<u>அலுவலகக்குறிப்பு–</u>**

அ)அத்தியவசிய பணிகள் என்பதால் மன்றம் அங்கீகரிக்கலாம்.

ஆ)தேர்தல் பணியின் அவசர அவசியம் கருதி நகராட்சி சட்டம் 1920 விதிஎண்.15ன், கீழ் பணி உத்தரவுகள் வழுங்கி பணிகள் மேற்கொள்ளப்பட்டதை மன்றம் அனுமதிக்கலாம்.

**<u>தீர்மான எண்: 30</u>**

அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

## <u>பொருள்–31</u>

தேவகோட்டை நகராட்சி பொதுசுகாதரப்பிரிவின் கீழ் திடக்கழிவு மேலாண்மை திட்டத்தின் கீழ் இந்நகராட்சியில் உள்ள 27 வார்டுகளில் தூய்மை பணி மேற்கொள்ள ஆணையாளர் அவர்களின் இதே எண்ணிட்ட செயல்முறை உத்தரவு ந.க.எண்.1009/2019/எச்1, நாள் 19.12.2015ன்படி, 115 தூய்மை பணியாளர்களுக்கு உத்தரவு வழங்கப்பட்டு உள்ளது. உத்தரவு முடிவடைந்த காலம் முதல் பணி நீட்டிப்பு முறையில் செயல்பட்டு வருகிறது. மேலும் ஒப்பந்தப்புள்ளி கோருவதற்கு நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களுக்கு நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர், மதுரை அவர்களின் மூலம் பரிந்துரை செய்து கடிதம் அனுப்பப்பட்டுள்ளது. தற்போதைய பணி நீட்டிப்பு 31.03.2021 உடன் முடிவடையும் நிலையில் உள்ளது. நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களிடமிருந்து அனுமதி பெறப்படும் நிலையில் காலதாமதம் ஏற்படுவதாலும், தற்பொழுது தமிழ்நாடு முழுவதும் கொரோனா வைரஸ் தொற்றினால் அதிக அளவில் பாதிப்பு

ஏற்பட்டுள்ளதாலும். பொதுசுகாதார தூய்மை பணி என்பதாலும் அத்தியவாசிய பணி மற்றும் கொரோனா வைரஸ் காய்ச்சல் தடுப்பு பணி மேற்கொள்ள வேண்டியுள்ளதால் பணியின் அவசர அவசியம் கருதி நிர்வாக அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளி கோரப்படும் வரை ஏற்கனவே 115 தூய்மை பணியாளர்களை கொண்டு பணிபார்த்து வரும் மதுரை திடக்கழிவு மேலாண்மை காரைக்குடி மூன்றாண்டு வழங்கப்பட்ட ஒப்பந்த வேலை விகிதம் மற்றும் நிபந்தனைகளின்படி, 115 தூய்மை பணியாளர்களை கொண்டு பொதுசுகாதாரப்பணி மேற்கொள்ள மதுரை மீனாட்சி திடக்கழிவு மேலாண்மை காரைக்குடி அவர்களுக்கு மேலும் மூன்று மாதங்களுக்கு 01.04.2021 முதல் 30.06.2021 வரை பணி நீட்டிப்பு செய்து வேலை உத்தரவு வழங்கலாம் அதற்கு ஆகும் உத்தேச செலவீனத் தொகை ரூ.45.00 இலட்சத்திற்கு செலவு மேற்கொள்ள மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு–**

அ) கொரோனா வைரஸ் காய்ச்சல் அதிகளவில் பரவி வருவதால் பொதுசுகாதாரப்பணி மேற்கொள்ள 18.03.2021ந் தேதிய தனி அலுவலரின் முன் அனுமதியை மன்றம் அனுமதிக்கலாம்.

ஆ) மேற்காணும் பணிக்கான செலவீனத்தை பொது நிதியின் கீழ் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மான எண்: 31**

அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

## பொருள் – 32

திருச்சிராப்பள்ளி மாநகராட்சியில் சுகாதார ஆய்வாளராக அயற்பணி அடிப்படையில் பணிபுரிந்துவரும் திரு வீ.ஜோதிபாசு என்பவர் தனது குடும்ப சூழ்நிலை காரணமாக ஒருவழி பணிமாறுதல் அடிப்படையில் திருச்சிராப்பள்ளி மாநகராட்சிக்கு நிரந்தரமாக பணியமர்த்தி கொடுக்க விண்ணப்பித்துள்ளார். அன்னாரின் கோரிக்கையினை நிறைவேற்ற திருச்சிராப்பள்ளி மாநகராட்சியில் உரிய தீர்மானம் நிறைவேற்றப்பட்டு நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களுக்கு உரிய கருத்துரு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. அதன்படி நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களால் மேற்படி கோரிக்கையினை பரிசீலனை செய்வது தொடர்பாக கூடுதல் விபரங்கள் கேட்டு அதற்கான தீர்மானம் நிறைவேற்றி அனுப்ப அறிவுறுத்தப்பட்டுள்ளது.

அதன்படி அன்னார் தேவகோட்டை நகராட்சியில் பணிபுரிந்த காலத்தில் முன்பண நிலுவையோ, ஒழுங்கு நடவடிக்கைகளோ மற்றும் தணிக்கைத் தடை ஏதும் இல்லை.

எனவே திரு வீ.ஜோதிபாசு, சுகாதார ஆய்வாளரை திருச்சிராப்பள்ளி மாநகராட்சிக்கு நிரந்தரமாக பணியமர்த்த தீர்மானம் நிறைவேற்றி அனுப்ப மன்றம் அனுமதிக்கலாம்.

**அலுவலகக் குறிப்பு–** மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மான எண்: 32**

அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

## பொருள் – 33

சிவகங்கை மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியம் லிட், கழனிவாசல் – காரைக்கடி என்பவரின் கடித ந.க.எண்.951/வி.பி.ஐ/2017, நாள் – 01.09.2020ன் படியும் வருவாய் ஆய்வாளர் அவர்களின் குறிப்பின்படி நகர சிவன்கோவில் அருகில் உள்ள ஆவின் பாலகம்

உரிமையாளர் திருமதி ராதா என்பவர் பெயரில் உள்ளதை ஆவின் பாலகம் திரு என்.சிதம்பரம் பெயருக்கு மாற்றம் செய்ய உரிய மன்ற அனுமதி வேண்டப்படுகிறது

**அலுவலக குறிப்பு** –மன்றம் அனுமதிக்கலாம்

**தீர்மான எண்: 33**

அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

**(ஒப்பம்)கே .மதுசூதனன்**
**தனி அலுவலர் மற்றும் ஆணையாளர்(பொ)**